1968 மார்ச் 9]

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : செகண்டரி கிரேட் போஸ்டில் வேலைசெய்கிற பி.ஏ., பி.டி. ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போகிறபோது இந்தப் பழைய ஊழிய காலத்தையும் சேர்த்துக் கணக்கில் எடுத்துக்கொள்ள அரசாங்கம் உத்தரவு போடுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : செகண்டரி கிரேட் போஸ்டில் இருந்த ஊழிய காலமும் சேர்த்துத்தான் கணக்கிடப்படுகிறது.

கோவையில் பல்கலைக்கழகம்

* 181 வின—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் சர்வகலாசாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத்தலைவர் அவர்களே, கோவையில் ஏராளமான கலைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி ஆகியவை இருக்கின்ற காரணத்தினால் அவற்றை இணைத்து அங்கே ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்த வாய்ப்பு இருப்பதனால் கோவையில் ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக ஒரு கோடி மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்தித்தர வேண்டுமென்றாலும் அண்மையில்தான் மதுரையில் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. ஒரு பல்கலைக் கழகம் என்றால், அதன் அமைப்பு, முறை, கட்டடம் ஆகிய எல்லாவற்றிற்கும் ஆறு, ஏழு கோடி ரூபாய் ஆகிறது. மதுரைப் பல்கலைக் கழகத்திற்குப் போதுமான இடவசதி, கட்டட வசதி ஏற்படுத்தித் தர சில லட்சம் ரூபாய்தான் ஒதுக்கக்கூடிய நிலையில் நாம் இருக்கிறோம். ஆகவே முதலில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகத்தைச் செம்மை படுத்திவிட்டு மற்றவற்றை யோசிக்கலாம். இடையில் திருச்சி, கோவை போன்ற இடங்களில் பல்கலைக் கழக சென்டர்களை—முன்பு மதுரையில் ஏற்படுத்தியிருந்ததைப்போல—ஏற்படுத்தலாமா என்பது யோசனையில் இருக்கிறது. மதுரை, அண்ணாமலை பல்கலைக் கழகங்களுக்கே போதுமான நிதி ஒதுக்கம் செய்ய முடியாத நிலையில் நாம் இருப்பதால் இப்போது கோவையில் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டத்தை மேற்கொள்வதற் கில்லை.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : கோவையில் பல்கலைக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று பல ஆண்டுகளாக வேண்டுகோள் கொடுக்கப் பட்டு வருகிறது. அங்கே பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதற்கான சூழ் நிலைகளும் இருப்பதனால் அங்கு ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை இந்த அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அனுதாபம் ஏராளமாக இருக்கிறது. அதில் உள்ள சங்கடங்களை எல்லாம் இப்போதுதான் சொன்னேன். முதலில் ஏற்படுத்தப்பட்டது செம்மைப்படுத்தப்பட்டாக வேண்டும். மேலும் ஒரு பல்கலைக் கழகம் 80 கல்லூரிகளை ஆட்சி செய்து வருகிறது என்றால், அதை நாற்பது, நாற்பது என்று பிரித்து இரண்டு பல்கலைக் கழகமாக ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக நிர்வாக

அமைப்பு, துணைவேந்தர், ரிஜிஸ்திரார், செனட், சிண்டிகேட் என்று போடுவதனால் எந்தவிதமான நன்மையும் வந்துவிடப்போவதில்லை. அதற்குப் பதிலாக சப்ஜெக்ட் வாரியாக—விவசாயத்திற்கு ஒரு பல்கலைக் கழகம், மருத்துவத்திற்கு ஒரு பல்கலைக் கழகம் என்பதாக—இப்படி அமைக்க முடியுமா என்கிற எண்ணம் இருக்கிறது. ஆகவேதான், இப்போது கோவை, திருச்சிபோன்ற இடங்களில் பல்கலைக்கழக சென்டர்களை அமைக்கும் கருத்து ஆலோசனையில் இருக்கிறது. புதிதாக இப்போது பல்கலைக்கழகம் ஏற்படுத்துகிற எண்ணம் இல்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அமைச்சர் மதுரைப் பல்கலைக் கழகத்தைப்பற்றிச் சொன்னதால் ஒரு கேள்வி. மதுரைப் பல்கலைக் கழகத்தில் சட்டப்படிப்புக்குக் கல்லூரி இல்லையே, அதை ஏற்படுத்துகின்ற திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தத் திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் போல காரைக்குடி கல்லூரிகளை ரெசிடென்ஷியல் பல்கலைக்கழகமாக ஆக்குவதற்கு அரசு ஏதாவது முடிவு எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட முறை இல்லை. அங்குள்ள என்ஜினியரிங் கல்லூரியைக்கூட அவர்களால் நடத்த முடியவில்லை என்று அரசாங்கமே எடுத்துக்கொண்டிருக்கிறது. அவை மதுரைப் பல்கலைக் கழகத்தின்கீழ் வருகிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதற்கான செலவை அரசாங்கமே எடுத்துக்கொள்கிறதா? அல்லது கல்லூரி ஏற்படுத்த அந்தப் பகுதியில் உள்ளவர்கள் 5 லட்சம் தர வேண்டும் என்பதுபோல ஏதாவது தொகை தரவேண்டுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கம் தான் ஏற்றுக் கொள்கிறது.

பாசன ஏரிகளை ஆழப்படுத்தல்.

* 182 வினா—**திரு. பெ. மலைச்சாமி** : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்து ஏக்கர் நிலத்துக்குமேல் பாசனத்துக்குத் தண்ணீர் கொள்ளும் கண்மாய்களை ஆழப்படுத்தும் திட்டத்தைப் பத்து ஏக்கர் நிலத்துக்குக் கீழ், பாசன வசதியுள்ள கண்மாய்களுக்கும் அமலாக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒரு ஏரியைத் தூர் வாரிப் பண்படுத்துவதற்கு அந்த ஏரியின்கீழ் உள்ள பதிவான ஆயக்கட்டு எவ்வளவு என்பதைக் கருதிமட்டும் நிச்சயிப்பதில்லை. ஆனால் பத்து ஏக்கருக்கும் குறைவான ஆயக்கட்டுள்ள ஏரிகளின் கீழ் பதிவான ஆயக்கட்டில் பயிர் விளைவிப்பதில் அதிக இடைவெளி ஏற்பட்டுவிடாது. அதனால் ஒரு சில ஏக்கர்மட்டுமே பயன்பெறும் இத்தகைய ஏரிகளைத் தூர் வாரிப் பண்படுத்தும் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வது இயலாது. எனவே, இத்தகைய ஏரிகள் இத்திட்டத்தின் கீழ் வழக்கமாய் எடுத்துக்கொள்ளப் படுவதில்லை.

திரு. எஸ். முருகையன் : சார், இந்த ஏரிகளைத் தூர்வாரி ஆழப் படுத்தக்கூடிய திட்டத்தின்கீழ் ஆழப்படுத்துவதற்கான விதிமுறைகள் என்ன என்ன ? ஒரு ஏக்கருக்கு இதற்காக எவ்வளவு பணம் செல